மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: (அ&ஆ) உலக வங்கி கடன் திட்டத்தின்கீழ் நெடுஞ்சாலை கிராமப்பணித்துறையினரால் கான் ஸ்ரோடு பாலம் (வியாசர்பாடி) அகலப்படுத்த வேலை துவக்கப்பட்டுள்ளது. சென்னைமாநகராட்சி தன் நிதியைக் கொண்டு ஓட்டேரி பாலத்தை அகலப்படுத்தும் பூர்வாங்க வேலையைத் துவக்கியுள்ளது.

திரு. சு. பாலன்: தலைவர் அவர்களே, சென்னையிலே இப்படி பட்ட பாலங்கள் கட்டப்பட்டு நீண்டகாலமாக இருக்கின்ற காரணத்தால், எப்போது இடிந்து விழுமோ என்ற நிலையில் உள்ள பாலங்களை மீண்டும் கட்டுவதற்கான வேலையை இந்த அரசு மேற்கொள்ளுமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே குறிப்பிட்ட இந்த இரண்டு பாலங்களைப் பற்றிய கேள்விக்கு பதில் அறிவித்திருக்கிறேன். மற்றப் பாலங்களைப் பற்றி தனியாக கேள்வி கேட்டால், தகவல் சொல்லலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது வேறு தொகுதியாக இருந்தாலும், திரு அரங்கநாதனுக்கு அனுமதி அளிக்கிறேன். திரு. மு, அரங்கநாதன்,

திரு சென்னை மு, அரங்கநாதன்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வியையொட்டியே, லாயிட்ஸ் சாலை பாலத்தையும், அதே போல் பீட்டர்ஸ் ரோடு பாலத்தையும் செம்மைப்படுத்துவதற்கு, போக்குவரத்துக்கு மிகவும் முக்கியமாக இருக்கின்ற காரணத்தால், இவைகளையும் அகலப்படுத்துவதற்கு உலக வங்கியிடமிருந்து உதவிபெற்று அரசு ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, இந்த இரண்டு பாலங்களுக்கு திரு. பாலன் அவர்கள் அக்கறை எடுத்துக்கொண்டது போல, இவைகளைப் பற்றி தனியாக கேள்வி போட்டால், விவரம் தரப்படும்.

Staff of Local Bodies

* Q.No.205—Thiru K. SUPPU: will the Hon. the Minister for Local Administration be pleased to state:

(a) whether it is a fact that the Government orders No.410/R.D & L.A., dated 28-2-73 No.106/P.W.D., dated 22-1-77 and 294, P.W.D., dated 22-2-77 are not yet implemented by the Department and

(b) If so the reason therefor ?

1979 மார்ச் 3]

மாண்புமிகு திரு. கா, காளிமுத்து: (அ) இல்லை.
(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. துரை முருகன்: தலைவர் அவர்களே, முதலிலே இந்தக் கேள்வியே என்ன வென்று புரியவில்லை. 28-2-73....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தயவுசெய்து இதைப்பற்றி சுப்புவைக் கேளுங்கள். கேள்வியே புரியவில்லை என்று சொல்லு கிறீர்கள்.

திரு துரை முருகன்: தலைவர் அவர்களே, இந்த அரசு ஆணை 410, 106, 294 என்று போடப்பட்டிருக்கிறது. அது பற்றி எனக்கு என்ன வென்று தெரியவில்லை. எனவே, அமைச்சர் அவர்கள் அந்த அரசு ஆணைகள் என்ன என்பது பற்றி விளக்கம் தந்தால், துணைக் கேள்விகள் போடுவதற்கு உதவியாக இருக்கும்.

மாண்புமிகு திரு கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, இதைப் பற்றி கேள்வி போட்டவருக்கும். அமைச்சருக்கும் தெரியும். அவர்கள் அந்த அரசு ஆணைகள் செயல்படுத்தப் படவில்லை என்கிற முறையிலே கேள்வி கேட்டிருக்கிறார். ஆனால், அந்த ஆணைகள் செயல்படுத்தப்பட்டிருக்கின்றன என்ற விவரங்களை நான் எடுத்துச் சொல்லியிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி என்ன என்று புரிந்து கொண்டு வந்திருக்க வேண்டும்.

திரு.க.சுப்பு: விஷயம் என்னவென்று எனக்கே தெரியாது இந்தக் கேள்வி ரொம்ப நாளைக்கு முன்னால் குறுகிய கால வினாவாகப் போடப்பட்டது.

திரு. எஸ்.ஜே. சாதிக் பாட்சா: கேள்வியைப் போடுகிற உறுப்பினர் கேள்வியைக் கொடுத்து அதற்கு அமைச்சர் பதில்சொல்லும் போது எல்லா உறுப்பினர்களுக்கும் தெரியும்படி இருக்கவேண்டும். அது சபையின் சொத்தாக மாறவேண்டும். விவரங்களைச் சொன்னால்தான் துணைக் கேள்விகள் கேட்க முடியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சுப்பு அவர்கள் கேள்வியைக் கொடுத்திருக்கிறார்கள். திரு. துரை முருகன் அவர்கள் கேள்வி புரியவில்லை என்று சொல்லுகிறார். அமைச்சர் பதில் சொன்ன பிறகு புரியவில்லை என்று சொன்னால் தங்கள் வாதம் சரியாக இருக்கும்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

திரு. மு. கருணாநிதி: அரசாணை எண்கள் 410 என்பது என்ன 106 என்பது என்ன, 294 என்பது என்ன என்றே புரியவில்லை. அதை விளக்கினால் துணைக் கேள்விகள் கேட்க சாதமாக இருக்கும்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: 23-2-1973 தேதியிட்ட ஊர்வளர்ச்சி உள்ளாட்சித் துறை அரசாணை எண் 410ல் டிப்ளமா தகுதி பெற்றவர் சென்னை மாநகராட்சியில் 10 வருடங்கள் ஓவர்சீயராகப் பணிபுரிந்தால் அவர்களை சூபர்வைசராக பதவி உயர்த்தலாம். டிப்ளமா தகுதியில்லாதோர் ஓவர்சியராகவே தொடர்ந்து பணியாற்ற வேண்டுமென்று உத்தரவு பிறப்பித்து கணக்கு ஆய்வாளர் இம்மாதிரி பதவி உயர்வு பெறுவது உயர்வினைக் குறிக்காது. வெறும் பதவி மாற்றத்தைத்தான் குறிக்கும். ஆகையால் உயர்வு ஊதியம் பெற முடியாது என்று குறிப்பிட்டுள்ளார். இது அரசாங்கத்தின் பரிசிலனையில் உள்ளது.

22-2-1977 நாளிட்ட பொதுப்பணித்துறை அரசாணை எண் 294ல் பொதுப்பணி நெடுஞ்சாலை நிலைமைப்பணி துறைகளில் இருக்கும் மேற்பார்வையாளர் பதவியை இளநிலை பொறியாளர் என்றும், இளநிலை பொறியாளர் பதவியை உதவிப் பொறியாளர் என்றும் மாற்றி உத்தரவிட்டது. இவ்வுத்திரவை அடிப்படையாக கொண்டு 22-6-78 நாளிட்ட ஊர் வளர்ச்சி உள்ளாட்சித் துறை அரசாணை எண் 954ல் சென்னை மாநகராட்சியிலுள்ள மேற் பார்வையாளர் பதவியை இளநிலைப் பொறியாளர் என்றும் இளநிலைப் பொறியாளர் பதவியை உதவிப் பொறியாளர் என்றும் மாற்றி உத்திரவிட்டுள்ளது.

22-1-1977 நாளிட்ட பொதுப்பணித் துறை அரசாணை எண் 106 மேற்பாவையாளர் பதவிக்கு சம்பளம் விகிதத்தை உயர்த்த ஆணை பிறபித்துள்ளது. இதற்கேற்ப மாநகராட்சியில் உள்ள மேற்பார்வையாளர் பதவிக்கான சம்பள விகிதத்தை மாற்ற அரசு பரிசீலித்து வருகிறது.

அடையாறு பகுதியில் சலவைத் துறை அமைத்தல்.

* வினா எண் 206 திரு. டி. கே. கபாலி: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை, அடையார் சலவையார்புரம் பகுதியில் டோபி கானா கட்டுவதற்கு குறிப்பேதும் ஆய்வில் இருந்ததா ?

(ஆ) ஆம் எனில் அத்திட்டம் என்ன நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: (அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.